# Refugee agencies help and advice

July 2007 Tamil

# ஒருங்கிணைப்பு கடன்கள்

**ஜூன் 11, 2007 முதல் உங்களுக்கு அகதி அந்தஸ்து அல்லது மனிதாபிமான அடிப்படையிலான பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதா?** ஆம் எனில், அரசின் ஒருங்கிணைப்பு கடன் பெறுவதற்கு நீங்கள் தகுதி பெறக்கூடும்.

## ஒருங்கிணைப்பு கடன் என்றால் என்ன?

அகதிகள் மற்றும் மனிதாபிமான அடிப்படையிலான பாதுகாப்பு பெற்றுள்ள மக்கள், UKயில் ஒரு புதிய வாழ்வைத் துவக்குவதற்கு உதவியாக, வட்டி ஏதுமின்றி வழங்கப்படும் கடன்களே ஒருங்கிணைப்பு கடன்கள் என்று அழைக்கப்படுகின்றன. இக்கடன்களை நீங்கள் எதிர்காலத்தில் திரும்ப செலுத்த வேண்டியிருக்கும் என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

## இவற்றை எதற்கு பயன்படுத்தலாம்?

உங்களுக்கு கடன் தேவைப்படும் சூழ்நிலைகள் பின்வருமாறு: வீட்டிற்கான வைப்பு தொகைகள், வீட்டிற்கு தேவைப்படும் அவசியமான பொருட்கள், நேர்காணல்கள் அல்லது பணிக்கு செல்வதற்கான பயண அட்டைகள், பணி ஆடைகள் அல்லது சாதனங்கள், கல்வி மற்றும் தகுதிகள். நீங்கள் பயிற்சி பெற்று வருபவராக இருந்தாலோ அல்லது படித்துக் கொண்டிருந்தாலோ, அடிப்படை வாழ்வுக்கான செலவுகளுக்காக நீங்கள் கடனுக்கு விண்ணப்பிக்கலாம். அவசியமில்லாத செலவுகளுக்காக கடன்கள் வழங்கப்படுவதில்லை.

## ஒருங்கிணைப்பு கடனை யாரால் பெற முடியும்?

கடனுக்கு விண்ணப்பிப்பதற்கு, உங்களுக்கு 18 வயது பூர்த்தியாகி இருப்பதுடன், நீங்கள் அகதி அந்தஸ்து அல்லது மனிதாபிமான அடிப்படையில் பாதுகாப்பு பெற்றிருக்க வேண்டும். ஒரு முறைக்கும் அதிகமாக நீங்கள் கடனுக்கு விண்ணப்பிக்க இயலாது.
நீங்கள் மற்றும் உங்கள் பங்காளர் ஆகிய இருவருமே கடனுக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி பெறுபவர்களாக இருப்பின், நீங்கள் இருவரும் கூட்டாக விண்ணப்பிக்கலாம். கூட்டுக் கடனை திரும்ப செலுத்துவதில் இரு பங்காளர்களுக்கும் சமமான பொறுப்பு உள்ளது.

## நீங்கள் என்ன தொகைக்கு விண்ணப்பிக்கலாம்?

கடனின் தொகையை நிர்ணயிப்பதற்கு, உங்கள் தேவைகள் மற்றும் சூழ்நிலை ஆகியவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். தொகை £100 முதல் £1000 வரை இருக்கக்கூடும். இது தனி மற்றும் கூட்டு விண்ணப்பங்கள் ஆகிய இரண்டிற்குமே பொருந்தும்.

## கடன்கள் எவ்வாறு அளிக்கப்படும்?

கடன்கள் பொதுவாக வங்கி கணக்கில் செலுத்தப்படும். உங்களுக்கு வங்கி கணக்கு இல்லாமலிருந்து, உங்கள் கடன் தொகை £450 குறைவாக இருந்தால், நீங்கள் ஒரு காசோலையை பெற்றுக் கொள்ளலாம். இதனை உங்கள் விண்ணப்பத்தில் நீங்கள் குறிப்பிட்டுள்ள அஞ்சல் அலுவலகத்தில் மட்டுமே உங்களால் பணமாக்க முடியும்.

## இக்கடன்கள் எவ்வாறு திரும்ப செலுத்தப்பட வேண்டும்?

கடன் திரும்ப செலுத்தப்படுதல் சாதாரணமாக ஆறு வாரங்களுக்குப்பின் துவங்கும். நீங்கள் பணியில் இருந்தால், இது பற்றி கலந்தாலோசிப்பதற்கு, பணி மற்றும் ஓய்வூதியங்கள் துறை (Department for Work and Pensions) உங்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளும். நீங்கள் வருமான உதவி (Income Support), வருமானம் சார்ந்த வேலை தேடுவோருக்கான உதவித்தொகை (Income-Based Jobseeker’s Allowance) அல்லது ஓய்வூதியக் கடன் (Pension Credit) பெறுபவராக இருந்தால், உங்களுக்கு வழங்கப்படும் ஆதாயங்களிலிருந்து கடன் தவணைகள் நேரடியாக வசூலிக்கப்படும். திரும்ப செலுத்தப்படும் தவணை விகிதம் குறைவாக அமைக்கப்படும்.

## மற்ற நிதியுதவிகளைப் பெறுவதற்கும் நான் தகுதி பெறுவேனா?

இக்கடன், கூடுதல் பயிற்சி, கல்வி அல்லது பணி ஆகியவற்றுடன் வாழ்க்கை அல்லது குழந்தை பராமரிப்பு செலவுகள் தொடர்பாக உதவும் பொருட்டு உங்களுக்கு அளிக்கப்படுமானால், இது பற்றி நீங்கள் முதலில் உங்கள் பணி மையம் ப்ளஸ் (Jobcentre Plus) அலுவலகத்துடன் கலந்தாலோசிக்க வேண்டும். கட்டணம் ஏதுமின்றி பிறவகை நிதி உதவிகளும் உங்களுக்கு கிடைக்கக்கூடும்.

## கடனுக்கு எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும்?

ஒருங்கிணைப்பு கடனுக்கான விண்ணப்ப படிவத்தை, உங்களுக்கு அகதி அந்தஸ்தை அளிக்கும் அல்லது மனிதாபிமான அடிப்படையில் பாதுகாப்பை அளிக்கும் முடிவை தெரிவிக்கும் கடிதத்துடன் சேர்த்து, எல்லை மற்றும் குடிவரவு முகமை (Border and Immigration Agency) உங்களுக்கு அனுப்பியிருக்க வேண்டும். நீங்கள் அதைப் பெற்றிராவிட்டால், எல்லை மற்றும் குடிவரவு முகமையில் உள்ள ஒருங்கிணைப்பு கடன் குழுவிற்கு (Integration Loan Team) 020 8196 5440 என்ற எண்ணில் தொடர்பு கொள்வதன் மூலம் அதனைப் பெற்றுக் கொள்ளலாம்.

அகதி முகமைகளான அகதி நடவடிக்கை (Refugee Action), குடிவரவு உதவி எண் (Migrant Helpline), ஸ்காட்லாந்து அகதிக் குழு (Scottish Refugee Council), அகதிக் குழு (Refugee Council) மற்றும் வேல்ஸ் அகதிக் குழு (Welsh Refugee Council) ஆகியவை விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்வதற்கு உங்களுக்கு உதவக்கூடும். மற்ற அமைப்புகளான அகதி சமுதாய அமைப்புகள் அல்லது குடிமக்கள் ஆலோசனை (Citizen’s Advice) சேவை ஆகியவையும் உங்களுக்க உதவக்கூடும்.

## பணம் தொடர்பான அறிவுரை

கடனை நீங்கள் திரும்ப செலுத்த வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும். எனவே, உங்களால் திரும்ப செலுத்தக்கூடிய தொகையை மட்டுமே நீங்கள் கடனாகப் பெறுவது அவசியமாகும். நீங்கள் திரும்ப செலுத்த வேண்டியிராத பிற ஆதாரங்கள் மூலமும் நிதியுதவி பெறுவதற்கு நீங்கள் தகுதி பெறக்கூடும். தயவுசெய்து இது குறித்து உங்களுக்கு அருகாமையில் இருக்கும் அகதி முகமையை தொடர்பு கொண்டு பேசவும்.